**தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதுகாப்பு அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட:டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம்முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(அ)** நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

**(ஆ)** முன்னைய ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** | **அமுல்ப்படுத்தப்படாத சிபாரிசுகள்** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|
| 2.1.3 (அ) | 01/2015 ஆம் இலக்க 2015 யூலை 20 ஆந் திகதிய அரசாங்க நிதிக்கொள்கை சுற்றிறிக்கையின் (05) ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 128(2)(ஐ) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான சந்தர்ப்பத்தில் பொருளாதார நிலைமையின் மாற்றங்களை கவனத்தில் கொண்டு ஏதாவதொரு சேவைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காலரீதியாக திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். | 1.6.1 (அ) (v) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமானப் பெறுவனவுகள்

அமைச்சிற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் வருமான குறியீடு 20.03.06.00 ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டு கடமைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை தரைப்படை மற்றும் விமானப்படை முறையே ஐக்கிய குடியரசு டொலர் 8,211,373.98 மற்றும் 10,965,751.85 ஆக மொத்தமாக ஐக்கிய குடியரசு டொலர் 19,177,125.85 சேகரிக்கப்பட்டிருந்தும் ஏசீஏ-1 வருமான கூற்றிற்கு இணங்க மீளாய்வாண்டில் வருமானமாக ஐக்கிய குடியரசு டொலர் 7,506,868.47 அல்லது ரூபா 2,447,153,974 மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. மேலும் இந்த வருமானத்தில் ஐக்கிய குடியரசு டொலர் 8,057,402.58 தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ஐக்கிய குடியரசு டொலர் 3,612,804.78 தொகையான நாணயக் கடிதம் திறக்கும் வசதிக்காக திறைசேரியின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தரைப்படை வெளிநாட்டு நாணய கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான வருமானத்தில் ஐக்கிய குடியரசு டொலர் 11,670,207.36 தொகையான வருமானம் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 இல் | இலங்கை தரைப்படை மற்றும் விமானப் படையின் வெளிநாட்டு நாணய கணக்கினுள் (NRFC) திறைசேரிக்கு அனுப்பும் வரை நிறுத்திவைக்கப்படுவதுடன் நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த நிறுத்திவைக்கப்படுகின்ற வருமானம் இரண்டு படைகளுக்குமாக டொலரின் மூலம் செலவுகளை மேற்கொள்ளும் போது 20.03.06.00 ஆம் இலக்க வருமான தலைப்பிற்கு செலவு வைத்து உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இவ்வாறு வெளிநாட்டு நாணய கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்ற வருமானத்தில் உரிய சமாதானப் படையின் சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக செலவு செய்யப்படுவதுடன் எச்சந்தர்ப்பத்திலும் அந்த டொலர் பெறுமதியானது நிதி அமைச்சினூடாக உரிய வருமான தலைப்பிற்கு செலவு வைக்கப்படவில்லை. இதற்குப் பின்னர் | நி.பி 128 (2) (ஆ) மற்றும் நி.பி 151 இன் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்படுகின்ற அரசாங்க வருமானமும் அந்த ஆண்டின் உண்மையாக சேகரிக்கப்பட்ட அரசாங்க வருமானமும் வருமான கணக்கினூடாக சுட்டிக்காட்டப்பட வேண்டியதுடன் 1/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற வருமானம் சேகரிக்கும் கணக்குகளில் அல்லது வைப்புக் கணக்குகளில் வைக்கப்படுவதனைத் தவிர்த்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு காணப்பட்ட நாணயமாற்று விகிதத்திற்கு இணங்க அப்பெறுமதி ரூபா 4,205,942,733 ஆகும். மேலும் இந்த நிறுத்திவைத்த வருமானம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருமானக் கணக்கினை தயாரிக்கும் போது இவ்வாறு இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாக குறிப்பின் மூலம் விளக்கமளித்தல் இடம்பெறும் எனவும் தெரிவிக்கிறேன். | |
| (ii) | 2022 தொடக்க வருமான மதிப்பீட்டிற்கு இணங்க வருமான தலைப்பு 10.03.07.05 உத்தரவுப் பத்திர கட்டண வருமானம் ரூபா 22,050,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் 2022 யூலை 29 ஆந் திகதி அரசாங்க நிதி திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய வருமான மதிப்பீட்டின் மூலம் ரூபா 28,890,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 திருத்திய உப பாதீட்டிற்கு இணங்க இந்த திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 22,000,000 ஆக மேலும் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டிற்கான உள்ளபடியான வருமானம் ரூபா 42,416,904 ஆக இருந்ததினால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே வித்தியாசம் ரூபா 20,416,904 ஆகும். அது திருத்திய வருமான மதிப்பீட்டில் 93 சதவீதமாக இருந்ததனால் உத்தரவுப் பத்திர கட்டண வருமானத்தினை மதிப்பீடு செய்தல் தவறுள்ளது என அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையேயான வித்தியாசத்திற்கு பின்வரும் விடயங்களும் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கிறேன்.<br>• 2022 ஆம் ஆண்டிற்கான உத்தரவுப் பத்திரத்தினை புதுப்பிக்கும் காலத்தை நீடித்தல் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக உத்தரவுப் பத்திரத்தினை புதுப்பித்தல் 2022 ஒக்தோபர் 01 ஆந் திகதி ஆரம்பித்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைதல்<br>• பயிர்ச் செய்கையை பாதுகாப்பதற்காக துவக்குகளை வழங்கும் போது பயிர்ச்செய்கை அளவு 05 ஏக்கர்களிலிருந்து 02 ஏக்கர்கள் வரை குறைத்ததன் காரணமாக உத்தரவுப் பத்திர வேண்டுதல் அதிகரித்தல் | வருமானத்தினை திட்டமிடுவதனை முடியுமான அளவு சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | • ஆபத்தான கொள்கலன்களுடனான கப்பல் செயற்பாட்டு கட்டணம் ரூபா 1,500 இலிருந்து ரூபா 5,000 வரை திருத்தம் செய்வதற்கு உட்படுதல் மற்றும் சமுத்திர பாதுகாப்பு செயற்பாட்டு நடவடிக்கை களுக்கான கட்டணம் ரூபா 5,000 இலிருந்து ரூபா 10,000 வரை திருத்தத்திற்கு உட்படுதல். | |
| (iii) | ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐக்கிய குடியரசு டொலர் 4,545,589.43 நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் ஐக்கிய குடியரசு டொலர் 344,559 தொகை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்டது. | இந்த நிலுவையாக இருந்த வருமானத்தினை துரிதமாக அறவீடு செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் நிரந்தர முகவர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி தேவையான நடவடிக்கை எடுக்குமாறு விமானப் படைக்கும் தெரியப்படுத்தப்பட்டது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கையினை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iv) | வெடிபொருட்கள் மற்றும் துவக்குகள் உத்தரவுப் பத்திர கட்டணம் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களை முறைமைப்படுத்தும் கட்டணம் என்பன தொடர்பாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த வருமானம் ரூபா 2,582,270 ஆகும். அவற்றில் ரூபா 1,326,890 ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 942,690 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் நிலுவையாகக் காணப்பட்டது. | இந்த நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்காக மேலதிக செயலாளருக்கு (சிவில் பாதுகாப்பும் அபிவிருத்தியும்) தெரியப்படுத்தப்பட்டுள்ள துடன் தற்பொழுது நிலுவை வருமானத்தினை அறவீடு செய்வதற்காக அனைத்து மாவட்ட செயலாளர் அலுவலகங்களின் மூலமும் இந்த நிலுவை வருமானத்தினை அறவீடு செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கையினை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (v) | நிதிப்பிரமாணம் 128(2)(இ) மற்றும் 1/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை சுற்றிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமானக் கூற்றிலும் ACA-1(i) படிவத்திலும் நிலுவையாகக் காணப்பட்ட வருமானங்களுக்குமிடையே ரூபா 626,500 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்த உத்தரவுப் பத்திர கட்டண வருமானம் ACA-1 (i) படிவத்தில் காட்டப்பட்டிருக்காமை இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருந்தது. | பின்னர் முன்னைய ஆண்டுகளின் நிலுவை மீதியினையும் சேர்த்து இப்பெறுமதியை கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 128(2)(இ) மற்றும் 1/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவை வருமான கூற்றில் சரியான நிலுவை வருமானத்தினை காட்டுதல் வேண்டும். |
| (vi) | 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 21,372,185,188 ஆக இருந்த போதிலும் ACA-1(i) படிவத்தில் கடந்த 03 ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்ட தேறிய வருமானத்தை காட்டும் போது 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 2,802,302,525 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய அண்மித்த 03 ஆண்டுகளின் தேறிய வருமானத்தை கணக்கு கூற்றுக்களில் காட்டும் போது தவறுதலாக இது இடம்பெற்றுள்ளதனால் எதிர்காலத்தில் சரியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான மற்றும் உறுதியான தகவல்களை கணக்குகளின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி அமைந்துள்ள 21.0437 ஹெக்டயர் காணி மற்றும் சுகுருபாய கட்டிடம் அமைந்துள்ள 1.4164 ஹெக்டயர் காணியினை மதிப்பீடு செய்தல் தாமதமடைந்ததன் காரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுகுருபாய காணி மற்றும் கட்டிடத்தினை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2022-07-28 ஆந் தகிதி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கிணங்க திட்ட வரைபடம் மற்றும் அங்கீகரித்த கட்டிடத்தின் திட்டம் 2022-09-06 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. இந்த மதிப்பீடு செய்தல் தாமதமடைந்ததானது மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இடம்பெற்ற தாமதத்தினால் என தெரிவிக்கிறேன். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத:துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களை கணக்கீட்டுப் பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 8.2 ஆம் பொது அறிவுறுத்தலுக்கு இணங்க மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**(இ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இற்கு முரணாக மீளாய்வாண்டின் சனவரியிலிருந்து திசெம்பர் வரை 23 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,768,330 முற்பணத்தினை | இவ்வாறான தாமதங்களைக் குறைப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையினை பின்பற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உபகட்டுநிதிகள் வழங்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்த்துவைக்கும் போது 26 நாட்களிலிருந்து 05 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | கட்டுநிதிக் கணக்கு தொடர்பான கூற்றிற்கு இணங்க திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதியின் அளவு ரூபா 11,578,631,743 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சலின் கீழ் கட்டுநிதிப் பெறுவனவுகளாக ரூபா 12,066,410,675 காட்டப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 487,778,932 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் அந்த கூற்றுக்கு இணங்க மீளாய்வாண்டில் திறைசேரிக்கு தீர்த்துவைக்கப்பட்ட கட்டுநிதிப் பெறுமதி ரூபா 10,371,888 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 498,150,820 ஆக ரூபா 487,778,932 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க சரியான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கட்டுநிதிக் கணக்கு தொடர்பான கூற்றில் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதியின் அளவு ரூபா 11,578,631,743 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதி பெறுவனவுகளாக ரூபா 498,150,820 பெறுமதி பதியப்பட்டிருந்தது. அதற்கிணங்க கட்டுநிதி பெறுவனவுகளின் முழு மொத்தமான ரூபா 12,076,782,563 தொகை கட்டுநிதிப் பெறுவனவுகளின் முழுப் பெறுமதியாக இனங்காணப்பட்டது. | சரியான பெறுமதிகான அடிப்படையாகக் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே தரப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. என்பது தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(i) குறித்த செயலுக்கான உபகட்டு நிதி பதிவேடு** | | |
| தேசிய பயிலுனர் படையணியினால் 2022 யூன் 23 ஆந் திகதி வரை குறித்த செயலுக்கான உபகட்டுநிதி பதிவேடு பேணப்படாதிருந்ததனால் அத்திகதிக்கு முன்னர் உபகட்டுநிதி கொடுப்பனவுகள் மற்றும் தீர்த்துவைத்தல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை. | 2022 யூன் 23 ஆந் திகதியிலிருந்து வழங்கிய அனைத்து குறித்த செயலுக்கான உபகட்டுநிதியும் நிர்ணயிக்கப்பட்டவாறு அந்தப் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்வதற்குத் தேவையான உள்ளகக் கட்டுபபாட்டு நடைமுறை தற்பொழுது பின்பற்றப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணம் 372 இன் பிரகாரம் கட்டுநிதி மற்றும் உபகட்டுநிதிகளை தொடர்ச்சியாக பரீட்சிக்க கூடிய வகையில் குறித்த செயலுக்கான உப கட்டு நிதி பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| **(ii) நட்டங்கள் தொடர்பான பபதிவேடு** | | |
| நி.பி 110 இன் பிரகாரம் நட்டங்கள் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற விபத்து நட்டங்கள் மற்றும் நட்டங்கள் சம்பந்தமான தகவல்கள் ஏடுகளில் பதியப்பட்டிருக்காத 69 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இதுவரை அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படாத விபத்து நட்டங்கள் மற்றும் நட்டங்கள் சம்பந்தமான தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு பதிவேடுகளை முறைப்படியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டினை பேணுதல் மற்றும் நாளதுவைரயாக்குதல் செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நி.பி 128 (2)(ஈ) இன் பிரகாரம் வருமான தலைப்பு 10.03.07.05 (உத்தரவுப் பத்திர கட்டண வருமானம்) இற்காக 2022 இன் வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய வருமான | எதிர்காலத்தில் அந்த நிறுவனங்களிடமிருந்து மதிப்பீட்டினைக் கோரி வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்க வருமானம் ஏனைய திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களின் மூலம் சேகரிக்கப்படுமாகவிருந்தால் அத்திணைக்களங்களிடமிருந்தும் |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு மாவட்ட செயலகத்தின் மூலமும் சேகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வருமானம் தொடர்பான மதிப்பீடு கோரப்பட்டிருக்கவில்லை. | எடுகப்பட்டுள்ளது. | அலுவலகங்களிடமிருந்தும் அறிக்கையைப் பெற்று அவற்றில் குறிப்பிட்ட விடயங்களை அரசாங்க மதிப்பீடுகளுக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டினை முடியுமான அளவு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்க வேண்டிய போதிலும் வருடாந்த பாதீட்டின் மூலம் ஏழு செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 85,063,000 நிதி ஏற்பாட்டினைப் போல ஐந்து மடங்கிற்கு அண்மித்த ரூபா 409,510,000 மேலதிக நிதி ஏற்பாடு குறைநிரப்பு மதிப்பீடு, நி.பி 66 மாற்றங்கள் என்பவற்றின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக வருடாந்த மதிப்பீடு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டுத் தொகை கிடைக்காததுடன் திருத்திய பாதீட்டின் மூலம் வழங்கிய நிதி ஏற்பாட்டுத் தொகையும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனவே செலவு விடயங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமையின் காரணமாக குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் நி.பி 66 மாற்றல்களின் கீழ் மேலதிக நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2021 யூன் மாதத்தில் காணப்பட்ட சந்தை விலைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தும் பணவீக்கத்தின் காரணமாக ஒவ்வொரு துறையிலும் விலைகள் அதிகரித்தனால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததன் காரணமாக மேலதிக நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. | நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு முடியுமான அளவு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 103-01-01 ஆவது செயற்திட்டம் அமைச்சு அலுவலகத்தின் 21 மூலதன மற்றும் மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 18,015,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அமைச்சு அலுவலகத்திற்கு ஆளனியினர் நியமிக்கப்படாமையின் காரணமாக மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு முழுவதும் சேகரிக்கப்பட்டிருந்தது என கணக்குகளின் மூலம் காட்டப்பட்டிருந்தது. எனினும் அந்த நிதி ஏற்பாட்டில் 93 சதவீதம் அல்லது ரூபா 16,805,000 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய 17 செலவு விடயங்களுக்கு மாற்றபபட்டு செலவு செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. எனினும் நிதிப்’ பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டதன் பின்னர் இன்னும் எஞ்சியுள்ள ரூபா 1,210,000 நிதி ஏற்பாடு மாத்திரம் 100 தசவீத சேமிப்பாக செலவு கூற்றின் மூலம் காட்டப்பட்டிருந்தது. | 103-01-01 என்ற செயற்திட்டம் பாதுகாப்பு அமைச்சின் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அமைச்சின் அமைச்சராக செயற்படுவது சனாதிபதி அவர்களாகும். அமைச்சருக்கான அனைத்து செலவுகளும் சனாதிபதி அலுவலகத்தின் செலவுகளிலிருந்து மேற்கொள்ளப்படுவதனால் 103-01-01 செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடானது ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 04 இன் பிரகாரம் செலவுகளை நிகழ்ச்சித்திட்டமாக்கும் போது அங்கிகரிக்கப்படுகின்ற நிதியானது நிதியாண்டிற்குள் அடைந்துகொள்ளக் கூடிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது என சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன் தேவைப்பாட்டினை முறைப்படியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரித்தலும் நிதி ஏற்பாட்டினை மாற்றம் செய்யும் போது முறையான முகாமைத்துவம் பேணப்படுதலும் இடம்பெறுதல் வேண்டும். |
| (இ) | வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்படாத 103-2-17-7-2509-0-13 செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 15,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 10,371,888 அல்லது 69 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | இடர் முகாமைத்துவ நிலையத்தின் 103-2-17-7-2509-0-13 என்ற செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 15,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது UNDP இனால் நிதி வழங்குகின்ற ஒரு புதிய செயற்திட்டமாக உள்ளதுடன் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் அங்கீகாரம் மற்றும் தொடக்க செயற்பாடுகளுக்காக இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. கட்டுநிதி | தேவைப்பாட்டினை முறையாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒக்தோபர் மாத்தில் கிடைத்தனால் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க 2022 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டதுடன் மிகுதி நிகழ்ச்சித்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படும் என்பதனால் அதற்கான நிதி ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 10,371,888 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 103-2-19-6-2509-0-17 ஆம் இலக்க மூலதன செலவு விடயத்திற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 78,080,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 260,000,000 தொகையும் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் மூலம் ரூபா 125,000,000 தொகையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் வழங்கப்பட்ட ரூபா 463,080,000 தேறிய நிதி ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவு ரூபா 261,500,000 ஆக இருந்ததனால் வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 43 சதவீதம் அல்லது ரூபா 201,580,000 சேமிப்பாகக் காணப்பட்டது. | 03/2022 ஆம் இலக்க செலவுகளைக் கட்டுப்படுத்தும் சுற்றிக்கையின் மூலம் அரசாங்க செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டதனால் போதியளவு கட்டுநிதி பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்காமையின் அடிப்படையில் இவ்வாறு நிதி ஏற்பாடு சேமிப்பாகி உள்ளது எனக் காட்டலாம். | தேவைப்பாட்டினை முறையாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | ரூபா 141,100,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட 4 மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூபா 136,096,605 ஆக இருந்த போதிலும் அத்தியவசியமானவை மற்றும் நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமை போன்ற | மேலதிக நிதி ஏற்பாடு முழுவதும் சேமிப்பாக காணப்பட்டதற்காக கட்டுநிதி போதியதாக இல்லாமை, 03/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றிக்கையின் பிரகாரம் அத்தியவசிய செலவுகளை மாத்திரம் செலவு செய்தல் மற்றும் மூலதனச் சொத்துக்களை | தேவைப்பாட்டினை முறையாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதி ஏற்பாட்டினை மாற்றும் போது முறையான முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

விடயங்களைக் காட்டி நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 46,500,000 மேலதிக நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தும் அவ்வாறு மாற்றப்பட்ட மேலதிக நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தும் தொடக்க நிதி ஏற்பாட்டிலும் ரூபா 5,003,395 சேமிப்பாகக் காணப்பட்டது. | மேம்படுத்துதல் மட்டுப்படுத்தப்படுதல் முதலியன காரணமாகும்.

(ஊ) 2021 திசெம்பர் 21 ஆந் திகதிய 03/2021 ஆம் இலக்க பாதீட்டு சுற்றிக்கை மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் அரசாங்க செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் பணத்தை செலவு செய்யும் போது சிக்கனமற்று நடவடிக்கைகள் எடுத்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது என்பது தெரிவுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

(i) பாதுகாப்பு நிறைவேற்று தலைவர் அலுவலகத்தினால் 2022 சனவரி 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட ஒரு நாள் கருத்தரங்கில் பங்குபற்றிய 300 முப்படை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 400 உத்தியோகத்தர்களுக்கு விரிவுரை மண்டப கட்டணத்திற்காக ரூபா 1,924,000 தொகையும் உபசரிப்பு செலவுகளுக்காக ரூபா 2,327,906 தொகையும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 945,507 தொகையும் ஆக ரூபா 5,197,413 செலவு | கற்கை நெறி நடாத்தப்பட்ட திறைசேரியின் கருத்தரங்கு மண்டபத்தின் உத்தியோகபூர்வ உணவு வழங்குனரிடமிருந்து உணவுகளைப் பெற்றுக்கொள்ளல், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பங்குபற்றியதனால் முப்படை உணவு மற்றும் உபசரிப்பு நடைமுறைகள் பின்பற்ற வேண்டியிருத்தல், பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், அத்தியவசியமான முன் பயிற்சிகளை நடாத்துதல், கௌரவிக்கும் வகையில் அலங்காரப்படுத்துதல், முதலியவற்றின் காரணமாக | சுற்றிக்கை அறிவுறத்தல்களுக்கு இணங்க அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செலவுகளை மேற்கொள்ளும் போது சிக்கனமாக ஆக்கபூர்வமாக மற்றும் வினைத்திறனாக நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவிலும் சிறப்பான விளைவினை பெற்றுக்கொள்ளும் வகையிலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | இச்செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | |
| (ii) | தேசிய பாதுகாப்பு கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறியின் விரிவுரையாளர்களுக்கு ஒரு மணித்தியலாலத்திற்கு ரூபா 3,000 வீதம் ரூபா 2,322,261 விரிவுரைப்படி செலுத்தப்பட்டிருந்தும் போக்குவரத்து வசதிகளுக்காக ரூபா 295,920 மாதாந்த வாடகை அடிப்படையில் இரண்டு வாகனங்களை வழங்குவதற்காக 2022 சனவரியிலிருந்து ஒக்தோபர் வரையான காலத்தில் ரூபா 2,756,383 தொகையும் அந்த வாகனங்களுக்கான எரிபொருள் செலவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இக்கல்லூரியிடமிருந்து 15 கி. மீற்றர் அளவான துாரத்தில் அமைந்துள்ள பல்கழைக்கழகத்திடமிருந்து விரிவுரையாளர்களை அழைத்துவருதல் இடம்பெற்றிருந்ததுடன் நிர்ணயிக்கப்பட்ட வேளைக்கு அழைக்கப்பட்ட வரிவுரையாளர்களை அழைத்து வருதல் மற்றும் மீண்டும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதனூடாக கற்கை நெறிகளை திட்டமிட்டவாறு தடையின்றி வெற்றிபெறச் செய்வதற்கு முடியுமாகவிருந்தது. | -மேற்படி- |
| (iii) | தேசிய பாதுகாப்பு கல்லூரியினால் நடாத்தப்பட்ட கற்கை நெறிக்காக பங்குபற்றிய 31 மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக 2021 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அடுத்துவரும் 02 ஆண்டுகள் காலத்திற்காக ரூபா 72,000,000 குத்தகை வாடகையானது உடன்படிக்கையின் அடிப்படையில் 24 மனைகளைக் கொண்ட ஒரு வீட்டு கட்டிடத் தொகுதி பெற்றுக்கொள்ளப்பட்டு | கற்கை நெறிக்கு பங்குபற்றிய வெளிப்பிரதேசங்களிலுள்ள மாணவர்களுக்கு கல்லூரிக்கு அண்மையில் தங்குமிடமும் போக்குவரத்து வசதிகளும் வழங்கப்பட்டதுடன் அதன் மூலம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முறைப்படியாகவும் சிறப்பாகவும் மற்றும் ஒருங்கிணைப்புடனும் உயர்ந்த உள நிலையிலும் மேற்கொள்வதற்கு முடியுமாகவிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மாதாந்தம் ரூபா 3,000,000 வீதம் வாடகை செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் அந்த வீட்டு கட்டிடத்தொகுதியிலிருந்து போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்காக மாதாந்தம் ரூபா 199,500 அடிப்படையில் ஒரு பஸ்வண்டி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை. | | |
| (iv) | ஒரு கற்கை நெறியின் முடிவில் அடுத்த கற்கை நெறியினை துரிதமாக ஆரம்பிப்பதற்கு முடியுமான வகையில் கற்கை நெறிகளை ஒழுங்கமைத்தல் செய்யப்படாமையின் காரணமாக 03 மாதங்களுக்கு அண்மித்த காலம் விளைவற்றுக் காணப்பட்ட வீட்டு கட்டிடத் தொகுதியின் வாடகைக்காக ரூபா 10,500,000 சிக்கனமற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கற்கை நெறி முடிவடைந்ததன் பின்னரும் அவர்களின் மேலதிக பட்டக் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளும் வரை அவர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது.<br><br>2023/02 கற்கை நெறிக்கு பங்குபற்றுகின்ற மாணவர்களின் முன்னைய கற்கை நெறிகளுக்காக (Pre - Course) இந்த வீட்டு கட்டிடத் தொகுதியில் 14 நாட்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டது. | -மேற்படி- |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றக்களில் தரப்படுகின்ற குறிப்பு இலக்கம் (iii) மற்றும் (iv) இற்கு இணங்க 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா | அப்பிழைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமைக்கான பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கிறேன். | திறைசேரி கணனி அச்சுப்பிரதிகளுடன் ஒப்பீடு செய்து சரியான பெறுமதியை காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 449,815,619 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி அச்சுப்பிரதிகளுக்கு இணங்க பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் அளவு ரூபா 452,564,354 ஆகும். அதற்கிணங்க ரூபா 2,748,735 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பான தெரிவுப் பரீட்சிப்பின் போது 2022 ஆம் அண்டு தொடர்பாக 4 சந்தர்ப்பங்களின் போது மொத்தமாக ரூபா 28,642,188 தொகையான செலவுகள் 2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செலவுகள் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 28,642,188 பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திசெம்பர் மாதம் முடிவடைந்ததன் பின்னர் கஸ்டப்பிரதேச படிகள் மற்றும் இணைந்த படிகள் செலுத்தப்படுவதனால் மற்றும் நிதி எற்பாடு போதியதாக இல்லாமை ஆகிய விடயங்களின் காரணமாக இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. | ஆண்டிற்கான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை முறையாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமிமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **அவதானிப்புக்கள்** | | | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (அ) | 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய | 1,336,746 | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, | இக்கடன் மீதியை தீர்த்துவைப்பதற் | சுற்றிக்கைக்கு இணங்க நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | PED/RED/2015/8 பொது(1) ஆம் இலக்க அரசாங்க நிதி சற்றிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் வழிகாட்டிக் கோவை இலக்கம் 01 | | ஓய்வுபெற்ற, மரணமடைந்த, வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள, கைவிட்டுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 4,244,535 ஆக இருந்ததுடன் அக்கடன் மீதியினுள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிலுவையகவிருந்த கடன் மீதி ரூபா 1,336,746 ஆகும். இக்காலங்கடந்த கடன் மீதி சம்பந்தமாக சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குரிய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 128(1)(உ) | - | அரசாங்கத்தின் சொத்துக்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்காக போதியளவிலும் முறைப்படியாகவும் ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்படுகின்றது என்பதற்கும் அடிக்கடி மெய்மையாய்வு செய்யப்படுகின்றது என்பதற்கும் போதியளவு ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் இடர் முகாமைத்துவ | 2022-12-31 ஆந் திகதி வரை இடர்முகாமைத்துவ பிரிவின் வாகனங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததனால் வாகனங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு இயந்திர பொறியியலாளரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு வாகனங்களின் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த மீளாய்வினை மேற்கொண்டு சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரிவின் 25 வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வினை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (இ) | நிதிப்பிரமாணம் - 128(2)(ஐ) மற்றும் 2015 யூலை 20 ஆந் தகிதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை சுற்றிக்கை மற்றும் 1/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றிக்கை | நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்’ பாடுகளின் பிரகாரம் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காலரீதியாக திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 1996 இன் 22 ஆம் இலக்க துவக்குகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்களை காலரீதியாக திருத்தம் செய்தல் இன்னும் தாமதடைந்து காணப்பட்டது. | புதிய ஆயுதங்கள் கட்டளைச் சட்டமானது சட்டவரைஞர் திணைக்களத்தினால் 2023-02-08 ஆந் திகதி இந்த அமைச்சுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதுடன் ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் இறுதியாக திருத்திய அறிக்கையினை வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சுற்றிக்கையின் பிரகாரம் அறவிடப்படுகின்ற கட்டண்ங்கள் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். |

## 2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

வங்கிக் கணக்கு செயற்பாடு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வங்கிக் கணக்கிற்கு நேரடி வைப்பாக கிடைத்திருந்த ரூபா 1,233,439 தொகையான இனங்காணப்படாத வைப்பு காணப்பட்டதுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டில் கணக்குகள் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2023 மார்ச் மாதம் இறுதியில் ரூபா 531,199 வைப்பினைத் தவிர்த்து மிகுதியானவை இனங்காணப்பட்டுள்ளது. அப்பணம் வங்கி பற்றுசீட்டு கிடைக்கின்ற வகையில் எதிர்காலத்தில் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்காண்பதற்கும் கணக்குகளைச் செம்மையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| பாதுகாப்பு படை தலைமையகத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் சில நிர்மாணங்கள் தாமதமடைதல், நாணயக் கடித்தினை திறத்தல் தாமதமடைதல், முதலிய காரணங்களால் எதிர்பார்த்த காலத்திற்குள் ஒப்பந்தத்தினை பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் ஒப்பந்த காலப்பகுதியினை நீடிக்க வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அவ்வாறான 06 வழங்கல் ஒப்பந்தக்காரர்களால் ரூபா 1,389,272,688 தொகை மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 6,212,417 தொகையான காலத்தை நீடிக்கும் 28 உரிமைகோரல்கள் (Claims for EOT) வேண்டப்பட்டிருந்ததனால் ஒரு நிகழத்தக்க பொறுப்பு காணப்பட்டது. | நிதி ஏற்பாட்டு பெறுவனவு தாமதமடைதல், ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்குத் தேவையான போதியளவு திரவத்தன்மையான பணம் இல்லாமை முதலிய காரணங்களால் உரிய காலப்பகுதியின் போது ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்ததனால் ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் காலத்தை நீடிக்கும் உரிமைக் கோரல்கள் (EOT Claims) வேண்டப்பட்டுள்ளது.)<br><br>இந்த உரிமை கோரல்களை மீண்டும் மீளாய்வு செய்து உள்ளபடியான செலவுகளை கணிப்பீடு செய்வதற்காக பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்க (CECB) அனுப்பிவைக்கப்பட்டுள்ள துடன் அமைச்சினால் (Dispute Adjudication Board) பிணக்குகளுக்கு நியாயத்தீர்ப்பளித்தல் சபையும் நியமிக்கப்பட்டுள்ளது. பெறுகை குழுவின் அங்கீகாரத்தின் | தேவையற்ற தாமதங்களின் காரணமாக உருவாகின்ற மேலதிக உரிமை கோரல்களைக் குறைத்து சிக்கனமற்ற செலவுகளைக் குறைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் இரண்டு நிறுவனங்களுக்கும் 2019 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 8,640,503.46 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | |

**3.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தினைப் பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தந்திரோபாய வழியிலான தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டத்தின் தொடக்க திட்டத்திற்கு இணங்க 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தின் நிர்மாணங்களை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கபட்டிருந்தும் பல்வேறு தாகதங்களின் காரணமாக திட்டமிட்ட காலப்பகுதிக்குள் எதிர்பார்த்த செயலாற்றல் மட்டம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட காலப்பகுதி 06 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை காணப்பட்ட ஒட்டுமொத்த பௌதீக செயல்முன்னேற்றம் 71.5 சதவீதம் என அறிவிக்கப்பட்டது. இச்செயற்திட்டம் முடிவடையாமையின் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த இராணுவ சேவைக்கிடையேயான ஒருங்கிணைந்த தந்திரோபாய வழியிலான தொடர்பாலினைப் பேணும் தொடக்க குறிக்கோளினை நிறைவேற்றுதலானது இன்னும் தாமதமடைந்து காணப்பட்டது. | நுண் அலைவரிசை வானொலி தொடர்பாடல் முறைமையை கொள்வனவு செய்யும் போது பெறுகைச் செயற்பாடு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பல சந்தர்ப்பங்களில் கோரப்பட்டிருந்தும் கேள்வி ஆவணத் திருத்தங்களிலுள்ள மாற்றங்களின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் மேற்கொள்ள முடியாதிருந்தமை நவீன தொழில்நுட்பத்திற்குப் பொருந்துகின்ற வகையில் பொருள் விபரக் குறிப்பு திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தமை முதலிய காரணங்களினால் கேள்வி இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் 2021 சனவரி 11 ஆந் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கேள்வி மதிப்பீட்டின் தாமதம் மற்றும் பெறுகை மேன்முறையீட்டு நடைமுறைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் காரணமாக குழுவின் சிபாரிசினை வழங்குதல் 2022 எப்ரல் 20 ஆந் திகதி வரை | திட்டமிட்டவாறு செயற்திட்டத்தினை முடிவுறுத்தி எதிர்பார்த்த செயலாற்றல் மட்டத்தினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாமதமடைதல். | |
| | இச்செயற்திட்டத்திற்காக நுண் அலைவரிசை வானொலி தொடர்பாடல் முறைமையினைக் கொள்வனவு செய்யும் பெறுகை செயற்பாடு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு விடயங்களின் காரணமாக கேள்வி இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் 2021 சனவரி 11 ஆந் திகதி பெறுகைச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் பெறுகைக்குழு சிபாரிசினை வழங்குதல் 2022 எப்ரல் 20 ஆந் திகதிவரை தாமதமடைந்திருந்தது. பின்னர் நிதி ஏற்பாடு இல்லாததன் காரணமாக பெறுகைச் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க இப்பெறுகைச் செயற்பாட்டிற்காக 06 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தமை செயற்திட்டம் தாமதமடைந்தமை தொடர்பாக நேரடியாக தாக்கமளித்திருந்தது. | 2022 ஆம் ஆண்டில் அப்போது காணப்பட்ட நிதிசார் நிலைமையினை காரணமாகக் கொண்டு நிதி ஏற்பாடு தடுக்கப்படல் மற்றும் செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக பெறுகை நடவடிக்கை தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது.<br><br>மேற்கூறிய செயற்பாடுகளின் காரணமாக பெறுகை செயற்பாடுகளுக்காக 06 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் அது செயற்திட்டம் தாமதமடைந்தமைக்கு நேரடியாக தாக்கமளித்துள்ளது. | |
| (ஆ) | 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதி அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க தேசிய பாதுகாப்பு கல்லூரி 2021 மே மாதம் ஸ்தாபிக்கப்பட்டு அதன் முதலாவது கற்கைநெறியின் சான்றிதழ் வழங்குதல் 2022 செப்தெம்பர் 14 ஆந் தகிதி இடம்பெற்றிருந்தும் நிறுவனத்தினை தோற்றுவிப்பதற்குரிய அதிகாரச் சட்டத்தின் வரைபு அங்கீகரிக்கப்பட்டிருக்காமையால் நிறுவனத்திற்கு உரிய சட்டரீதியான ஏற்பாடுகள் | இக்கல்லூரியினை தோற்றுவிப்பதற்குரிய அதிகாரச்சட்டம் தற்பொழுது வரைபு கட்டத்தில் காணப்படுவதுடன் 2022 சனவரி மாதம் 12 ஆந் திகதி நடைபெற்ற தேசிய பாதுகாப்பு கல்லூரியின் 6 ஆவது முகாமைத்துவ சட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க இக்கல்லூரியின் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. | உரிய அதிகாரச்சட்டத்தினை அங்கீகரித்துக்கொள்ளச் செய்வதன் மூலம் நிறுவனத்தின் சட்டரீதியான தன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படவில்லை. | | |
| (இ) | 2016 மார்ச் 30 ஆந் திகதி அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க தேசிய பர்துகாப்பு கல்வி நிறுவனம் 2016 யூலை மாதம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த நிறுவனத்தினை சட்டரீதியான அடிப்படையில் ஸ்தாபித்தலானது 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்து காணப்பட்டது. | திருத்திய அதிகாரச்சட்டத்தின் வரைபானது 2023-03-30 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் 2023-05-09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் அவர்களினால் அந்த அதிகாரச்சட்டத்தின் வரைபில் மேலதிக நடவடிக்கை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அனுப்பிவைப்பதாக எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது.<br><br>அதிகாரச் சட்டத்தினை அங்கீகரிப்பது தாமதமடைந்த போதிலும் எதிர்பார்த்த குறிக்கேள்களையும் நிறுவனத்தின் நோக்கங்களையும் நிறைவேற்றுதலும் மேலதிக நடவடிக்கைகளை திட்டமிடுதலும் சிக்கனமாகவும் காலத்துக்கு பொருத்தமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது. | உரிய அதிகாரச்சட்டத்தினை அங்கீகரித்து நிறுவனத்தின் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | தந்திரோபாய வழியிலான பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டத்திற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 38.54 மில்லியன் செலவுசெய்து | இரைச்சலற்ற 22 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் கூடாரம் நிர்மாணித்தலும் 2020-12-31 ஆந் தகிதி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. | தந்திரோபாய வழியிலான பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்ட குறிக்கோள்களுக்காக காலரீதியாக |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்ட 22 மின் பிறப்பாக்கிகள் மற்றும் ரூபா 562.16 மில்லியன் செலவுசெய்து கொள்வனவு செய்யப்பட்ட 11 நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்ட 11 தொடர்பாடல் கோபுரங்களும் அதனுடன் தொடர்புபட்ட துணைக் கருவி பெட்டிகளும் சமாந்தர செயற்பாடுகளின் நிண்ட தாமதத்தின் காரணமாக 2020 ஆம் ஆண்டிலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | இந்த இயந்திரங்களை எதிர்பார்த்த குறிக்கோள்கரளை அடைந்து கொள்வதற்கு ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும் தற்பொழுது முட்படைகள் மற்றும் விசேட அதிரடிப்படையின் வானொலி ஒலிபரப்புத் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இடர் முகாமைத்துவ பிரிவினால் 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற சூறாவளி உள்ளடங்கலாக இயற்கை அனர்த்தங்களின் காரணமாக கலன்பிந்துனுவெவ, தலாவ, தம்புத்தேகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வீடுகள் மற்றும் ஆதனங்கள் சேதத்திற்கு உள்ளாகிய 38 நபர்களுக்கு மொத்தமாக ரூபா 1,315,519 இழப்பீட்டுப் பணத்தை செலுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் ஒரு வீட்டிற்கு ரூபா 10,000 வீதம் ரூபா 300,000 முற்பணங்கள் செலுத்துவதனைத் தவிர்த்து மிகுதியான ரூபா 1,015,519 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை என தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இவ்வாறு 2022 ஆம் ஆண்டில் இடருக்கு உள்ளாகிய அனுராதபுரம் மாவட்டத்தின் 19 பிரதேச செயலாளர் பிரிவுகளின் 231 நபர்களுக்கு 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 1/2020 ஆம் இலக்க இடர்முகாமைத்துவ சுற்றிக்கையின் பிரகாரம் சேதத்திற்கு உள்ளாகிய ஆதனங்களுக்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டின் நானகாவது காலாண்டிற்காக பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு 2022 நவம்பர் மாதமளவில் முடிவடைந்ததன் காரணமாக அந்த ஆண்டிற்காக மிகுதியான இழப்பீட்டு பணத்திற்காக நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு முடியாதிருந்த போதிலும் தற்பொழுது அந்த நிதி ஏற்பாடு மாவட்ட செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>ஆதனத்தின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்த நலன்பெறுனர்களுக்கு இழப்பீட்டினை வழங்குதல் மேற்கொள்ளப்படாததுடன் ஆதனங்களை சரியாக அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. | 1/2020 ஆம் இலக்க இடர்முகாமைத்துவ சுற்றிக்கையின் பிரகாரம் வீடுகள் மற்றும் ஆதனங்களின் சேதத்திற்கு இழப்பீடு செலுத்துதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | (i) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பந்திக்கான 35 ஆம் பின்னிணைப்பிற்கு இணங்க செயற்திட்ட பெறுகை குழுவிற்கு ரூபா 200 மில்லியன் வரையான பெறுகைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்படக்கூடியதாக இருந்தும் பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கட்டிடம் 1, 2 மற்றும் 4 இற்காக 390 சோபா தொகுதியையும் 110 மேசைகளையும் (Coffee Table) ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கான இயலுமை காணப்பட்டிருந்தும் சமமான காலப்பகுதியில் 3 சந்தர்பங்களின் கீழ் கேள்வி மனுக்கள் கோரி ஒரே வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக ரூபா 3,855,140 விலை முரண் பாதிப்பு ஏற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | பின்வரும் காரணங்களின் அடிப்படையில் சோபா தொகுதிகள் மற்றும் மேசைகளுக்காக (Coffee Table) தனத்தனியாக கேள்வி கோரி ஒப்பந்தங்கள் வழங்க வேண்டி ஏற்பட்டதனால் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள மேலதிக செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது என தெரிவிக்கிறேன்.<br>• நிருவாக நடவடிக்கைகளின் வசதிகளுக்காக ஒவ்வொரு கட்டிடங்களின் ஒப்பந்த நடவடிக்கை /வழங்கல் சேவைகளை தனிதனியாக மேற்கொள்வதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டது.<br>• ஒவ்வொரு கட்டிடத்திற்குமாக ஒரே சேவை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் இறுதிக் கொடுப்பனவு அந்த அந்த படைகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மூலம் இடம்பெறுவதனால் விலை மனுக்கள் கோருவதிலிருந்து தனித்தனியாக கோவைகளை பேணுவதற்கு நடவடிக்கை | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து சிக்கனமாக வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டது.<br>• மூன்று பெறுகைகளும் ஒன்றாக மேற்கொள்ளப்படுமாகவிருந்தால் 387 சோபா தொகுதிகளும் 110 மேசைகளும் போன்ற அளவினை அக்காலப்பகுதியின் போது வழங்குவதற்கு ஒப்பந்தக் கம்பனி முன்வருமா என்ற நிச்சயமற்ற தன்மை மற்றும் சிறிய அளவிலான வழங்குனர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கி அதிக போட்டியினை உருவாக்குதல்.<br>• பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1 ஆம் பந்திக்கு இணங்க அக்கறையினைக் காட்டும் அனைவர்கர்களுக்கும் நியாயமான மற்றும் சமனான சந்தர்ப்பத்தினை வழங்குதல். | |
| (ii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்வி மனுதாரர் சமர்ப்பித்த கேள்வி மனுவின் பின்னர் பெறுகை நிறுவனத்தினால் உரிய கேள்வி மனுதாரருக்கு உடனபடியாக முறையான பதிலளிக்கும் கடிதம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் சோபா தொகுதியினை வழங்குவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனருக்கு கட்டளையை வழங்குவதற்கு 33 | எதிர்காலத்தில் இச்செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு, பெறுகை பிரிவு மற்றும் CECB நிறுவனத்திடமிருந்து உரிய நடவடிக்கையை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவேன் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்விக்கு பதிலளித்ததன் பின்னர் உரிய கேள்விதாரருக்கு உடனபடியாக முறையான பதிலளிக்கும் கடிதம் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாட்களிலிருந்து 52 நாட்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | (i) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.1 (அ) பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக தரைப்படைக்காக 529,000 மீற்றர் பொலிஸ்டர் வூல் புடவைகளை கொள்வனவு செய்வதற்குரிய கேள்வி கோரல் ஆவணங்கள் மற்றும் 2021 யூலை 29 ஆந் திகதி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க புடவை மாதிரிகளின் தரம் தொடர்பாக புடவைகள் மற்றும் ஆபரணங்களின் தொழில்நுட்பம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 3 நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுகூட தரப்பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் கேள்வி திறக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற பெறுகைக் குழுத் தீர்மானத்திற்கு இணங்க ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரப் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் கேளவி மதிப்பீடு இடம்பெற்றிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்தும் வெளிக்கள பரீட்சிப்புக்களின் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்வதற்கு 2021-08-11 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழவினால் ஆலோசனை வழங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | புடவை மாதிரிகளின் தரத்தை மதிப்பீடு செய்வதற்காக 18 | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் பெறுகைகளின் தரத்தினை | பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்கள் |

வரையறைகள் இனங்காணப்பட்டிருந்தது டன் அவற்றில் 08 வரையறைகள் பிரதான வரையறைகளாக (Ciritical Parameters) காட்டப்பட்டிருந்தது. எனவே அவ்வாறு பரீட்சிக்கப்பட வேண்டிய பிரதான வரையறை (Dimensional Stability to Dry Cleaning) பரீட்சிக்கப்பட்டிருக்காதது டன் புடவைகளின் தரத்தினை மதிப்பீடு செய்யும் போது பயன்படுத்தப்படுகின்ற பிரதான வரையறைகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படாது பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த பரீட்சிப்பிற்குச் சமனான ஒரு பரீட்சிப்பு இலங்கை தரைப்படையினால் மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் இப்பரீட்சிப்பு விஞ்ஞான ரீதியான அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒரு அறிக்கையாக ஏற்றுக்கொள்ளல் சிக்கலுடையதாகும்.

பரீட்சிப்பதற்காக எடுக்கும் காலத்தையும் கிரயத்தினையும் கருத்தில் கொண்டு ஏற்றுக்கொள்ளப்படும் 03 நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரப்பரிசோதனை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை உரிய பெறுகை குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் என தயவாக தெரிவிக்கிறேன்.

மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பாதுகாப்பு தலைமையக நிர்மாண செயற்திட்டத்தின் உப களஞ்சியத்தில் காணப்பட்ட 306 வயர் ரோல்கள் காணாமல் போயிருந்ததுடன் அதற்காக இனங்காணப்பட்ட நட்டம் ரூபா 793,688 ஆகும். இது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தும் உரிய பெறுமதியை அறவீடு செய்யும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 நவம்பர் 16 ஆந் திகதி கடற்படை தலைமையகத்திற்கு உரிய சேவை நபர்களிடமிருந்து அறவீடு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க 2023 மே மாதம் 03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உரிய பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து தவணை ரீதியாக அறவீடு செய்வதற்கு தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நட்டங்களைக் குறைப்பதற்காக பொருத்தமான கட்டுப்பாட்டு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டிய நபர்களை இனங்காணுதல் மற்றும் அறவீடு செய்யும் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | முப்படை தலைமை அலுவலக செயற்திட்டத்தின் EXPO OTDR Tester உபகரணம் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதனால் ரூபா 2,077,328 நட்டம் ஏற்பட்டிருந்தும் அந்த நட்டத்தில் 2023 மே 03 ஆந் தகிதி வரை அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 180,035 மாத்திரமாகும். | இந்த உபகரணம் காணாமல் போயுள்ளதனால் இடம்பெற்ற நட்டத்தின் பெறுமதியை அறவீடு செய்யும் மேலதிக நடவடிக்கை கடற்படை தலைமையகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் இன்றுவரை ரூபா 1,897,293 பணத்தை அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நட்டம் சம்பந்தமாக அறவீடு செய்யும் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய மாணவர் படையணியில் 70 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டுதுடன் கணக்காளர் நிருவாக உத்தியோகத்தர் ஆகிய பதவி வெற்றிடங்களின் காரணமாக நிதிசார் கட்டுப்பாட்டு மற்றும் நிறுவன ரீதியான நிருவாக நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவது தொடர்பாக பாதகமான தாக்கத்தை அளித்துள்ளது. | தேசிய மாணவர் படையணி 42 நிறுவனங்களை உள்ளடக்கியிருந்ததுடன் 91நிரந்தர சிவில் ஊழியர்களையும், நி.பி 95 இன் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள 48 சிவில் ஊழியர்களையும் பல்நோக்க சோவையின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள 22 ஊழியர்களும் இப்படையணியில் கடமைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களின் கடமைகளை நிறைவேற்றும் போது இப்பதவிகள் வெற்றிடமாக இருப்பதன் காரணமாக நிதிசார் கட்டுப்பாடு மற்றும் நிறுவக ரீதியான நிருவாக நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுதல் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது என தெரிவிக்கிறேன. | போதியளவு ஆளணியினைப் பேணுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பாதுகாப்பு கல்லூரிக்குத் தேவைப்படக்கூடிய ஆளணியினரை நிர்ணயித்தல், பதவிகளை உருவாக்குதல், ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்தல், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தை உள்ளடக்கிய நிர்ணயிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல் முதலியன மேற்கொள்ளப்பட்டது என்பது | இக்கல்லூரியானது தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முப்படைகளின் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவினை வழங்குகின்ற உயர் நிறுவனம் என்பதனால் கொழும்பு பிரதேசத்திற்கு அண்மித்த பகுதிகளில் சிவில் மக்கள் பிரதேசத்தினுள் கல்லூரி அமைந்திருப்பதன் காரணமாக ஏனைய | அத்திவசியமான மற்றும் போதியளவான ஆளணியினர் பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்படாததுடன் நிருவாக ரீதியான செயற்பாடுகளுக்காக முப்படைகளின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவிகளுக்குரிய 132 உத்தியோகத்ர்களைக் கொண்ட ஆளணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் தற்பொழுது நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளின் உச்ச இயலளவு 40 நபர்கள் மாத்திரம் என்பதனால் ஒப்பீட்டு ரீதியாக அதிக நிருவாக ரீதியான ஆளனியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது அவதானிக்கப்பட்டது. | சிவில் நிறுவனங்கள் போல் செயற்படாத இக்கல்லூரியின் பாதுகாப்பு சம்பந்தமாக இராணுவ முகாம் என்ற வகையில் இரவு பகல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br><br>மேலும் கல்வியை பெற்றுக்கொள்வதற்கு மிகவும் பொருத்தமான சுற்றாடலினை உருவாக்கும் எண்ணத்தில் முறைப்படியாகவும் கவர்ச்சியாகவும் கல்லூரியை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துவதனை மேற்கொள்வதற்காக ஆளணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கிறேன். | |
| (இ) | அமைச்சு மற்றும் அதன்கீழ் உள்ள ஏனைய பிரிவுகளின் கடமைகளுக்காக முப்படை ஆளணியாக உத்தியோகத்தர்களும் ஏனைய பதவிகளை சார்ந்த 700 இராணுவ அங்கத்தவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான ஊதியங்கள் உரிய முப்படையினால் மேற்கொள்ளப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | அத்தியவசியமான மற்றும் போதியளவான ஆளணியினர் பேணப்படுதல் வேண்டும். |